


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணியின் நிறைவில், பயங்கரவாதத்தை ஒழித்திட இந்திய ராணுவத்துடன் துணை நிற்போம் என பல்வேறு கட்சித் தலைவர்கள் அணிவகுத்து சூளுரைத்து நின்ற காட்சி.

### ஒவ்வொரு பள்ளிகளில் பின்தங்கிய மாணவர்களுக்கும் - பாடத்திற்குண்டான ஆசிரியர்களுக்கும் பயிற்சி குறித்து தீர்மானித்து

# பள்ளிக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த ஆய்வு அறிக்கை!

## சர்வே அறிக்கையை முதல்வரிடம் வழங்கியபின் மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் பேட்டி!

சென்னை, மே 12-

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் சென்னை, சேப்பாக்கம், எழிலகம், 5ஆவது தளத்தில் உள்ள மாநில திட்டக் குழு அலுவலக கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (10.05.2025) தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், மாநில அளவிலான அடைவுத் தேர்வு - 2025 முடிவுகளின் "State Level Achievement Survey" குறித்து பத்திரி கையாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

பள்ளிக் கல்வியில் நாம் வெவ்வேறு வகுப்புகளுக்கு பாடம் நடத்திக் கொண் டிருக்கிறோம். பாடம் நடத்தும்போது அதற்கு ஒரு திட்டம் வைத்திருக்கி றோம். ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை படித்த குழந்தைகளுக்கு என்ன வெல்லாம் தெரியவேண்டும்; நான்கா வது, ஐந்தாவது வகுப்பு வரை படித்தால் என்னவெல்லாம் தெரியவேண்டும் - இந்த பாடம் படிப்பதால் என்ன விளை வுகள் வரும் என்பதை பாடத்திட்டத்தை எழுதும் போதே, முன்பே முடிவு செய்தி ருக்கிறோம். அந்த outcome அதன் பிரகா ரம் இருக்கிறதா? பரீட்சையை வைத்து மார்க் போடுவது என்பது ஒன்று - ஆனால், ஐந்தாவது படித்துவிட்டு வெளியில் வரும்போது அவர்களுக்கு என்னென்ன தெரியவேண்டும் என்று முன்கூட்டியே தெரிந்து வைத்திருப் பார்கள்.

**பள்ளிக்கல்வியின் தரம் மதிப்பீடு குறித்து ஆய்வு!**

தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா மட் டுமல்ல, உலகம் முழுவதும் யார் பாடத் திட்டம் வைத்தாலும் அப்படிதான் வைப் பார்கள். அதுபோல வைக்கும்போது அந்த learning outcome assessment - இதுவரைக்கும் மாநில அரசு பள்ளிக் கல்வித் துறையில் செய்தது கிடை யாது. ஒன்றிய அரசு நான்கு வருடத் திற்கு ஒரு முறை செய்வார்கள். இல் லையென்றால், NGOs செய்வார்கள். இவ்வளவு பெரிய பள்ளிக் கல்வித் துறை வைத்திருக்கிறோம் - 30000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கிறது - இதற்கெல்லாம் நிறைய செலவு செய்கி றோம். பட்ஜெட்டில், பள்ளிக் கல்வித்துறைக்கு தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அப்படி இருக்கும் போது, இந்த பள்ளிக் கல்வியின் தரம் எப்படியிருக்கிறது? எவ்வளவு செலவு செய்கிறோம் - ஆசிரியர்களை நிய மித்து வேலை செய்யப்படுகிறது. குழந் தைகள் நாம் நினைத்தபடி அந்த இடத்தை அடைகிறார்களா? உ.ம். மூன்றாம் வகுப்பு படித்த குழந்தை அந்த இடத்திற்கு வந்தடைகிறார்களா? என்பதுதான் assessment. அதை மதிப் பீடு (assessment) செய்வதற்கு, உலகம் முழுவதும் எப்படி செய்யவேண்டும் என்பதற்கு ஒரு methodology இருக்கி றது.

அதாவது, ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் குழந் தைகளுக்கு முதல் நிலை - அ, ஆ, இ..... என்று முதலில் சொல்லிக் கொடுப்போம். பிறகு 1,2,3.... ஆகி யவை கற்றுக் கொடுப்பது - எழுத்து மற் றும் எண்ணை கற்றுக் கொள்வது - அதுதான் முதல்நிலை (firststage) - படிக்க கற்றுக் கொள்வது (learning to read) - அடுத்த நிலை நான்காவது, ஐந்தாவது படிக்கும் குழந்தைகள் - learn செய்வ தற்காக படிப்பது - அடுத்த நிலை என்ன வென்றால், எட்டாவது வகுப்பு வரும் போது abstract தெரிந்து கொள்வது அளவுக்கு வரவேண்டும் - ஒரு பாடத் திட்டம் வைத்திருக்கிறோம் என்றால், மூன்றாவது வகுப்பு வரை வரும்போது எந்த நிலையை அடைந்திருக்கிறார்கள் - ஐந்தாவது வகுப்பு வரை வரும்போது எந்த நிலையை அடைந்திருக்கிறார்கள் - எட்டாவது வகுப்பு வரை வரும்போது எந்த நிலையை அடைந்திருக்கிறார் கள். அதை மதிப்பீடு செய்வதுதான் இந்த கணக்கெடுப்பு (Survey).




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.5.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் துணைத்தலைவரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் செயல் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சந்தித்து, மாநில திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட கற்றலில் இருக்கும் இடைவெளிகளைக் கண்டறிவது மற்றும் மாநில அளவிலான அடைவு ஆய்வு அறிக்கையை (State Level Achievement Survey) வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் மரு. எம். ஆர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள்!**

**தமிழ்நாட்டில் நாங்கள் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இந்த இரண்டி லும் நாங்கள் கணக்கெடுப்பு செய்தி ருக்கிறோம். கணக்கெடுப்பு செய் யப்பட்டு, அதற்குண்டான** standard tools **இருக்கிறது - என்ன மாதிரி செய்யவேண்டும் - அதன்படி அது செய்யப்பட்டு, அதற்குண்டான முடிவுகள் அதை எல்லாவற்றையும் அலசி, ஆராய்ந்து தற்போது தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த அறிக்கையை மாநிலக் குழுவின் சார்பாக இன்றைக்கு வழங்கப்பட்டிருக் கிறது. இதுதான் தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்த மதிப்பீட்டுக் கணக்கெடுப்பை** (assessment survey) **செய்திருக்கிறோம்.**

**9 லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளிடம் சர்வே!**

இந்த அறிக்கையின் அடிப்படை என்னவென்றால், சாதாரணமாக, as sessment செய்யும்போது எவ்வளவு வரவேண்டும், எவ்வளவு வரவில்லை என்பதை விட்டுவிடுவார்கள். ஆனால், இந்த அறிக்கை எப்படி வேறுபடுகிறது என்றால், இதில் 9 இலட்சத்திற்கு மேற் பட்ட மூன்றாம் வகுப்பு, ஐந்தாவது வகுப்பு, எட்டாவது வகுப்பில் இருக் கின்ற குழந்தைகளை survey செய்தி ருக்கிறார்கள். ஏன் அவ்வளவு குழந் தைகளை survey செய்யப்பட்டிருக்கிறார் கள் என்று சொன்னால், பள்ளிக் கல் வித்துறை செயலாளர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் இருக்கிறார்கள். இவர்கள் இந்த அறிக்கையின் அடிப்ப டையில், மேற்கொண்டு நடவடிக்கை கள் எடுக்க வேண்டும் என்று சொன் னால், எந்தப் பள்ளிக் கூடத்தில் என்ன deficiency இருக்கிறது - எந்த வகுப்பில் இருக்கிறது - எந்த பாடத்தில் இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியவேண் டும். அப்போது, சரியாக அவர்கள் கண் டுபிடிக்கவேண்டும் என்று சொன் னால், அவ்வளவு பெரிய sample எடுக்கவேண்டியிருக்கிறது - அதனால், தமிழ்நாடு முழுவதில் உள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளில் இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளையும், அனைத்து பள்ளி களையும் கவர் செய்திருக்கிறோம்.

ஆனால், ஒவ்வொரு பள்ளிக்கூடத் தில் எடுக்கப்பட்ட ஆய்வுகள் - அந்தப் பள்ளியின் தரம் எப்படியிருக்கிறது? அந்தப் பள்ளியின் கல்வித் தரம் எப்படி யிருக்கிறது? அதன் outcome எவ்வாறு வந்திருக்கிறதா? என்பதை நம்மால் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். அதே போல, learning outcome செய்யும் போது, அனைத்து பாடங்களையும் கவர் செய்து (தமிழ், ஆங்கிலம், கணக்கு, சமூக அறிவியல்) இந்த மதிப் பீடு நாங்கள் செய்திருக்கிறோம். மதிப் பீடு எப்படி செய்யவேண்டும்? எவ்வ ளவு சாம்பிள் எடுத்திருக்கிறோம்? அதன் outcome என்னவாகியிருக்கி றது? என்பதற்கெல்லாம் ஒரு செய்தி வெளியீடு வழங்குவார்கள். அதில் அனைத்துவகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் இன்று வழங்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கையின் சாராம்சம்.

**மாவட்டம் வாரியாக பள்ளியின் தரம் ஆய்வு!**

இதில் எந்த மாவட்டம் நல்ல perfor mance-ல் உள்ளது. எந்த பஞ்சாயத்து யூனியன் நல்ல performance-ல் உள் ளது என்பது முதற்கொண்டு, எந்தெந்த பாடங்களில் நல்ல performance செய்கி றார்கள் - எந்தெந்த பாடங்களில் இல்லை என்பது வரைக்கும் இந்த அறிக்கையில் விளக்கங்கள் வழங்கப் பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பாடப்பிரிவு பிரகாரமும் இருக்கிறது. அதன் பிறகு பார்த்தோம் என்றால், ஆங்கிலம், தமிழ், சமூக அறிவியல், Environment Sciences-ல் நாங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல performance இருக்கிறது. குறிப்பாக எட்டாவது படிக்கக்கூடிய மாணவர்களுக்கு, கணக்கு பாடத்தில் மட்டும் கொஞ்சம் தொய்வு இருந்தது. அதற்கு காரணம், கோவிட் பெருந் தொற்றினால் பள்ளிக்கூடம் இரண்டு வருடங்கள் நடைபெறவில்லை -நம் மால் அதற்குண்டான gap-யை bridge செய்ய முடியவில்லை. அந்த இழப்புக் குப் பிறகு அதைவிட இதை பார்க்கும் போது நன்றாக தான் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனாலும், குறைவாக இருக்கிறது.

**முதல்வரிடம் விளக்கியுள்ளோம்!**

இப்போழுது இந்த அறிக்கையின் அடிப்படையில், பள்ளிக் கல்வித் துறை செயலாளரும், அமைச்சர் அவர்களும் என்ன செய்வார்கள் என்றால், இந்த அறிக்கையை எடுத்துக் கொண்டு, எங்கு இதற்குண்டான strategy-யை செய்யவேண்டும் என்றால், அதன் தரத்தை இன்னும் உயர்த்தலாம் என்ற முடிவுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையை வழங்கிவிட்டு வந்திருக்கிறோம். முதல மைச்சர் அவர்களிடம் இதற்கான விளக்கமாக சொல்லியிருக்கிறோம். அடுத்ததாக அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

மூன்றாவது வகுப்பைப் பொறுத்த வரை மொத்தம் 36,829 பள்ளிகள் - அதில், 3,08,701 மாணவ, மாணவி கள் நாங்கள் survey செய்வதற்காக மதிப்பீடு செய்திருக்கிறோம்.

ஐந்தாவது வகுப்பைப் பொறுத்த வரை மொத்தம் 36,829 பள்ளிகள் - அதில், 3,43,270 மாணவ, மாணவி கள் நாங்கள் survey செய்வதற்காக மதிப்பீடு செய்திருக்கிறோம்.

எட்டாவது வகுப்பைப் பொறுத்த வரை மொத்தம் 16,354 பள்ளிகள் - அதில், 3,28,307 மாணவ, மாணவி கள் நாங்கள் survey செய்வதற்காக மதிப்பீடு செய்திருக்கிறோம்.

இதை எப்படி மதிப்பீடு செய்வது என்றால், அனைத்து பள்ளிக் கூடங்க ளில் படிக்கக்கூடிய மாணவர்களின் தக வல் MES என்ற Data அடிப்படையில், அதில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒர unique நம்பர் இருக்கும் - சாம்பிள் சர் வேக்கு போகும்போது குறிப்பாக 10 மணிக்கு ஆரம்பிக்கப் போகும் தேர் விற்கு முன்பு 9.30 மணிக்கு MES மூல மாக random-ஆக 20 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு ஒரு லிஸ்ட் வரும் - அந்த லிஸ்ட் வந்தவுடன் அந்த குழந்தை அன்றைக்கு பள்ளிக்கூடத் திற்கு வந்திருக்கிறாரா? என்று பார்ப் பார்கள் - 18 குழந்தைகள் தான் வந்தி ருக்கிறார்கள் - 2 குழந்தைகள் வரவில்லை என்றால், மறுபடியும் அங்கே சொன்னால், 2 random no. generate செய்யப்பட்டு வரும். சாம் பிள் எப்படி எடுக்கப்பட்டது என்று கேட் டால், முழுவதும் அறிவியல் சார்ந்த முறையில் random generate நம்பர் மூலமாக தான் எடுத்திருக்கிறோம். அதன் பிறகு, Education Research Cen tre மூலம் தயாரித்த அந்த கேள்வித் தாளை கொடுத்து பூர்த்தி செய்ய சொல்வோம். அவ்வளவு பெரிய 10 இலட்சம் டேட்டா process செய்ய வேண்டும் என்று கேட்டால், அந்த முறையில் பயன்படுத்தி, இந்த assess ment நடைபெற்றது.

**இந்த நான்கு ஆண்டில் 69 சதவிகிதம் மேம்பட்டுள்ளது!**

இந்த டேட்டா எல்லாவற்றையும் பார்க்கும்போது, மூன்றாம் வகுப்பு மாணவர்கள் தமிழ், ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட கேள்விகள் 100 கேள் விகள் கொடுக்கப்பட்டது என்றால், எல்லா மாணவர்களையும் சேர்த்து மாநிலம் முழுவதும் எடுத்துப் பார்த்த தில் 67 விழுக்காடு கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லமுடியும். ஆங்கிலத்தில் 69 விழுக்காடு கேள்விக ளுக்கு அவர்களால் பதில் சொல்லமுடி யும். நான்கு வருடத்திற்கு முன்பு, இந் தியா முழுவதும் assessment செய்தபோது, தமிழ் மற்றும் ஆங்கிலம் - தமிழ் 64 சதவிகிதம் - ஆங்கிலத்தில் 63 சதவிகிதம் தான் வந்தது. ஆனால், தற்போது நான்கு வருடங்களுக்குப் பிறகு, 67 சதவிகிதம், 69 சதவிகிதம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்பது நன்றாக தெரிகிறது.

கணக்கை பொறுத்தவரைக்கும், கொடுத்த 100 கேள்விகளுக்கு நமக்கு 54 சதவிகிதம் வருகிறது. 2021 நடந்த சர்வேயில் மாநில அளவில் 57 சதவிகி தம் இருந்தது - இந்திய அளவில் 58 சத விகிதம் இருந்தது. சுற்றுச் சூழல் - நமக்கு 76 சதவிகிதம் - 2021-ல் செய்த சர்வேயில் 60 சதவிகிதம் தான் வந்தி ருக்கிறது. இதுதான் மூன்றாம் வகுப் பைப் பொறுத்தவரைக்கும் மிகவும் முக்கியமான முடிவுகள் இந்த சர்வே எடுக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் - இந்தியாவை விட சராசரி அதிகரித்திருக்கிறது - நாம் செய்த சர்வேயில் தமிழ் - 76 சதவிகி தம் - ஆங்கிலம் - 51 சதவிகிதம். மாநில அளவில் - 52 சதவிகிதம் - இந்திய அள வில் 54 சதவிகிதமாக உள்ளது.

எட்டாவது வகுப்பில் மாணவர்க ளின் தேர்ச்சி சதவிகிதம் - அனைத்துப் பாடங்களிலும் நம்முடைய மாநிலம் better-ஆக இருக்கிறது. குறிப்பாக சமூக அறிவியலில் மிகவும் அதிகமான வளர்ச்சியில் உள்ளதை நம்மால் பார்க்க முடிகிறது.

**எண்ணும் எழுத்தும் மூலம் மாணவர்கள் முன்னேற்றம்!**

இதனுடைய சிறப்புக் கூறுகள் ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டால் (மூன்றாவது, ஐந்தாவது, எட்டாவது) மூன்றாவது, ஐந்தாவது - 50 சதவிகி தத்திற்கு மேல் மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றிருக்கிறார்கள். கடந்த 2021-விட இப்போது நன்றாக இருக்கிறது. குறிப் பாக, பள்ளிக் கல்வித் துறை கடந்த நான்கு ஆண்டுகளில், எண்ணும் எழுத்தும் என்கின்ற திட்டத்தின் மூல மாக ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பார்க்க முடிகிறது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு பள் ளிகளில் எந்த மாணவர்கள் பின்தங்கியிருக்கிறார்கள் - அந்த பாடத் திற்குண்டான ஆசிரியருக்கு மேலும் பயிற்சிகள் கொடுக்க வேண்டுமா? எந்த மாதிரியான பயிற்சி வழங்கலாம் என்பதை பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்லாது, ஸ்டேல் லெவ லில் நாம் என்னென்ன செய்ய வேண் டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண் டும் - மாவட்ட அளவில் என்ன செய்யவேண்டும் என்பதை முடிவு செய்யமுடியும். அடுத்ததாக பிளாக் லெவலில் என்ன செய்யவேண்டும் - பள்ளிக் கூடங்கள் அளவில் நாம் என்ன செய்ய முடியும் என்பதை, இந்த தரவு களை வைத்துக் கொண்டு பள்ளிக் கல் வித் துறையால் செயல்பட முடியும். இதுதான் இந்த சர்வேயில் இருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் தெரிவித்துள்ளார்.